


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 83

செவ்வாய்க்கிழமை
17 பெப்ரவரி 2026

மாசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின்

## பாதையை விடுவிப்பதற்கு மறுக்கின்றது இராணுவம்!

அந்தப் பகுதியில் நேற்றுப் பதற்றம்



யாழ்ப்பாணம், பெப்ரவரி 17

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் 35 வருடங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில், அந்த ஆலயத்துக்கான பாதையை விடுவிப்பதற்கு படையினர் தொடர்ச்சியாக மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். இதனால் அங்கு நேற்றுப் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. »11

## பெரும் ஆபத்துக்குள் தேசியப் பாதுகாப்பு!

பெரமுனவுக்கு வந்த கவலை

கொழும்பு, பெப். 17

நாட்டின் தேசியப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்குள் உள்ளது என்று, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மைக்கால »11

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் உடன் பதவிவிலக வேண்டும்

எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

கொழும்பு, பெப். 17

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பதவிவிலக வேண்டும் என்று, தென்னிலங்கையைச் சேர்ந்த பிரதான அரசியற் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் »11

## யாழ்ப்பாணப் பல்கலையில் பகிடிவதை; விசாரணையைத் தொடங்கியது சி.ஐ.டி.

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் பகிடிவதைகள் தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் »12

## 'பிரஜா சக்தி' திட்டம் ஜனநாயக விரோதம்

யாழ். மாநகரசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 17

பிரஜாசக்தி திட்டம் ஜனநாயக விரோதமானது. உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைப் பறிக்கும் அந்தத் திட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகரசபையில் தீர்மானம் »11

யாழ். மாவட்டச் செயலரிடம்

## வலி. வடக்குக் காணிகளை உடன் விடுவிக்குமாறு மனு

யாழ்ப்பாணம், பெப். 17

வலிகாமம் வடக்கில் படையினரின் வசமுள்ள காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம் நேற்று மனுவொன்று வழங்கப்பட்டுள்ளது.

படையினரின் »11

## யாழ். மாநகரப் பழக்கடைகளை ஒழுங்கமைப்பதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணம் மாநகரில், பேருந்துத் தரிப்பிடத்துக்கு அண்மித்துள்ள பழக்கடைகளை ஒழுங்கமைப்பது என்று யாழ்ப்பாணம் மாநகரசபையில் நேற்றுத் »11

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு நாளைமறுதினம்!

நான்கு நாள்களில் பன்னிரண்டு அமர்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நாளைமறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்கள் பன்னிரண்டு அமர்வுகளாக பல்கலைக்கழக »11

க.பொ.த. ———

## சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகிறது இன்று



கொழும்பு, பெப். 17

2025ஆம் ஆண்டுக்குரிய கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது. இது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ்.இந்திகா குமாரி லியனகே தெரிவித்ததாவது:- »12

முரச்சந்தி முரளி

"கோயிலை விடுவினமாம் ஆனா அங்க போக பாதையை விடாயினமாம். நல்லாயிருக்கடா உங்க நல்லிணக்கச் சாம்பாறு!"

## தங்கத்தின் விலையில் சிறிய வீழ்ச்சி

விரிவு பக்கம்:-02

அத்துமீறி மீன்பிடி

## தமிழக மீனவர்கள் 25 பேர் காங்கேசன்துறையில் கைது

யாழ்ப்பாணம், பெப். 17

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 25 பேர் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இடம்பெறும் »11



## கோப்பாயில் ஒருவர் அடித்துக் கொலை!

காணிப் பிணக்குகளே காரணம்?

3 சந்தேகநபர்கள் தலைமறைவு

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுயில் நேற்று ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். செல்லத்துரை செல்வரஞ்சன் (வயது-59) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4349 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 01 06 52 68 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1416 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 30 41 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0375 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 2 5 2 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2455 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 11 14 22 79 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6107 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 1 7 6 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2137 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 25 28 50 82 |
| விசேட எழுத்து | C |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 16.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0223 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 58 59 63 |

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# குடிநீர் விநியோகத் திட்டத்தை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு

**கிளிநொச்சி, பெப்.17**

**கிளிநொச்சி மாவட்டத்தில், மக்களின் தேவைகளின் அடிப்படையில் குழாய் வழிக் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகளை விரிவுப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப் படும் என்று வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் மருத்துவர் கலாநிதி சுசில் ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சிக்குக் கடந்த வாரம் வருகைதந்த அமைச்சர் நீர் விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்கால பொருளாதார நலன்கருதி, பிரதானமாக பரந்தன் பகுதியில் அமைக்கப்படவுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் தேவை கருதி, முக்கியமாக கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் அதிகரித்துவரும் சிறுநீரகப் பாதிப்புகளைப் கருத்திற்கொண்டு, கிளிநொச்சி மாவட்ட நீர் விநியோகத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், கிராமங்களுக்கான குழாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும்-என்றார். (க-இ)



## தங்கத்தின் விலையில் சிறிய வீழ்ச்சி

கொழும்பு, பெப்.17

தங்கத்தின் விலை நேற்றுச் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை 24 கரட் பவுண் ஒன்று 3 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்ட நிலையில், நேற்று அதன் விலை 3 ஆயிரம் ரூபாவால் குறைந்துள்ளது. நேற்று 24 கரட் பவுண் ஒன்று 3 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

22 கரட் பவுண் ஒன்று 3 இலட்சத்து 62 ஆயிரத்து 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)

## இ.போ.ச. ஊழியர்களுக்கு விரைவில் பதவி உயர்வு

கொழும்பு, பெப்.17

இலங்கைப் போக்குவரத்துச்சபை, ஊழியர்களின் தகுதிகளை மறுபரிசீலனை செய்து, அவர்களுக்கு உத்தியோகபூர்வ பதவி உயர்வுகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இதனால் பொதுப்போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. 350க்கும் மேற்பட்ட பேருந்துகளை த் தினமும் சேவையில் ஈடுபடுத்தமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0815 | | |
| ஆங்கில எழுத்து | P | வெற்றி இலக்கம் | 8 5 4 7 6 6 |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3081 | ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 05 08 25 38 | | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | A | வெற்றி இலக்கம் | 21 24 47 71 |
| வெற்றி வாரம் | 5242 | | |

| SASIRI DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0911 | வெற்றி இலக்கம் | 33 45 49 |

| லக்ன ராசி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ரிஷபம் | | வெற்றி இலக்கம் | 05 09 20 22 |
| சீட்டிழுப்பு வாரம் | 4793 | | |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | G | சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கம் | 39 41 52 55 | வெற்றி வாரம் | 2257 |

| அத கோடிபதி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.02.2026 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | O | வெற்றி இலக்கம் | 03 30 56 74 |
| வெற்றி வாரம் | 2907 | | |

## சுற்றிவளைப்புகளில் 853 பேர் கைது

கொழும்பு, பெப்.17

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 853 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புக்களில் 31 ஆயிரத்து 525 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், குற்றங்களுடன் தொடர்புடைய 20 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 429 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 203 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 527 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 96 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-இ)



## செயற்கைமுறைக் கருத்தரிப்புக்கு இரண்டாயிரம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, பெப்.17

ஐ.வி.எவ். எனப்படும் செயற்கைக் கருத்தரிப்புக்கான, இலவச சிகிச்சை முறைக்கு, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று கொழும்பு காசல் வீதி மகளிர் மருத்துவமனை அறிவித்துள்ளது. இது தொடர்பில் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் கமல் செனவிரத்ன தெரிவிக்கையில், 2 ஆயிரத்து 140 தம்பதியிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

விண்ணப்பதாரர்களில் பெரும்பாலானோர் 30-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள். இந்தநிலையில், சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டவுடன், வயது மற்றும் உடல் ஆரோக்கிய நிலைமைகளின் அடிப்படையில், முன்னுரிமை வழங்கப்பட்டு சிகிச்சை முன்னெடுக்கப்படும். அதேவேளை செயற்கைக் கருத்தரிப்புச் சிகிச்சைக்கான கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன. எனினும், அதிநவீன ஆய்வுகூட வசதிகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை. குறித்த ஆய்வுகூடங்களின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வேலைகள் அனைத்தும் முடிவடைந்தவுடன், முற்றுமுழுதான இலவச செயற்கைக் கருத்தரிப்புச் சிகிச்சை ஆரம்பிக்கப்படும். இந்த நடவடிக்கை ஊடாக, இலங்கையிலுள்ள அரச மருத்துவமனைகளில், ஐ.வி.எவ். எனப்படும் செயற்கைக் கருத்தரிப்புக்கான, இலவச சிகிச்சை ஆரம்பிக்கும் முதலாவது மருத்துவமனையாக, கொழும்பு காசல் வீதி மகளிர் மருத்துவமனை திகழும்-என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழருக்கு நிரந்தரக் குடியுரிமை

## தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் நரேந்திர மோடிக்குக் கடிதம்

**சென்னை, பெப்.17**

**40 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குதல், நீண்டகால விசா வழங்குதல் போன்ற நிலையான மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான நிரந்தர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

இலங்கைத் தமிழர்கள் நீண்டகாலமாக சட்டரீதியான நிச்சயமற்ற நிலையிலேயே வாழ்கின்றனர் என்றும், பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில், சமூகத்துடன்ஒன்றிணைந்துவாழ்கின்றபோதும், குடியுரிமை அல்லது நீண்டகால விசா போன்ற நிலையான சட்டபூர்வமான தீர்வுகள் தற்போதுவரை இவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங்களைப் பரிசீலிக்கத் தடையாக உள்ள முந்தைய நிர்வாக உத்தரவை இரத்துச் செய்யவேண்டும் என்று கோரியுள்ள தமிழ்நாட்டு முதலமைச்சர், மனிதாபிமான அடிப்படையிலான நல்ல முடிவை எடுப்பீர்கள் என நம்புகின்றேன் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## சட்டத்தரணிகள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, பெப்.17

சட்டத்தரணி மல்வாரச்சி மற்றும் அவரது மனைவி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று நாடு முழுவதும் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## பல்கலைக்கழகங்களில் ஆளணிப்பற்றாக்குறை




நாட்டின் அரச பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு சுமார் 50 சதவீதப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று ராஜரட்டப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட மாணவர் சங்கத் தலைவர் திலின நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ராஜரட்டப் பல்கலைக்கழகத்தில் இந்த நிலைமை மிகவும் பாரதூரமானதாக மாறியுள்ளது. முகாமைத்துவ பீடத்தில் தற்போது சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவ்வளவு எண்ணிக்கையிலான மாணவர்களுக்குக் கற்பிக்க வெறும் 12 பேராசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இப்பீடத்தில் விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு தற்போது 45 சதவீதப் பற்றாக்குறை உள்ளது. விரிவுரையாளர் பற்றாக்குறையால், மாணவர்கள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவாலாக ஆய்வுப்பணிகள் உள்ளன. ஆய்வுப் பணிகளுக்குத் தேவையான வழிகாட்டல்களையும், அறிவையும் வழங்கப் பேராசிரியர்கள் போதியளவில் இல்லை. இதனால் மாணவர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதிலும், பட்டப்படிப்பைத் தொடர்வதிலும் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் உயர்கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் உடனடியாகத் தலையிட்டுத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும்-என்றார். (க)

## மின்சக்தித்துறைப் பிரச்சினைகள்; எதிர்வரும் 20ஆம் திகதி விவாதம்

கொழும்பு, பெப்.17

மின்சக்தித்துறை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் இந்த யோசனை அன்று முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. நிலக்கரி இறக்குமதியின்போது ஊழல் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று அரசியல் மேடைகளில் பேசப்பட்டுவரும் பின்னணியில் இந்த விவாதம் நடைபெறவுள்ளது. (எ-இ)

## நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



கொழும்பு, பெப்.17

கிரிஷ் கொடுக்கல் வாங்கல் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் நரமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு, நாளைமறுதினம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் நீதிமன்றப் பணிகளிலிருந்து நேற்று விலகியுள்ள நிலையில், கொழும்புமேல்நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இலங்கையில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்காக, இந்திய கிரிஷ் நிறுவனத்திடம் இருந்து 70 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்று, அதைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் சட்டமா அதிபரால், நாமலுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (க-இ)




## புறா.. புறா... கடத்தல் புறா..! - 1

காதலுக்குப் புறாக்களைத் தூதுவிட்ட காலம் போய், இப்ப கடத்தலுக்குப் புறாக்களைப் பாவிக்கினமாம். கள்ளக்கடத்தலும் கடலும் ஒட்டிப் பிறந்த ரட்டைக்குழந்தையள் எண்டு சொல்லுவினம். அந்தக் காலத்தில இருந்து இந்தக்காலம் வரைக்கும் கடத்தல் செய்யிறவைக்கு கடல் தான் முதல் சொய்ஸா இருக்கும். ஏனெண்டால், நிலம் மாதிரி கடலில பெரிசாக் கண்காணிப்பு இருக்காது. அப்பிடி நேவிக்காரர் கண்காணிக்கிறதெண்டாலும் ஒரே இடத்திலேயே சென்றி போட்டமாதிரி நிக்கமாட்டினம். இடைக்கிடை நேவிக்காரர் படகுகளில எட்டிப் பார்துக்கொண்டு போவினமே தவிர நங்கூரம் போட்டெல்லாம் கடலிலேயே குடியிருக்கமாட்டினம். இது கடத்தல்காரருக்கு வசதி. எப்ப நேவியின்ர நடமாட்டம் இல்லையோ அந்த இடைவெளிக்குள்ளால கடத்தல் சாமான்களைக் கொண்டு போகவேண்டிய இடங்களுக்கு அனுப்பிடுவினம்.

இந்தக் கடத்தலில போதைப்பொருள் மாதிரியான, சமூகத்துக்குத் தீங்கான சாமான்களை மட்டும் தான் கடத்துவினம் எண்டில்லை. இஞ்சை என்ன கொண்டந்தால் கூட லாபம் பாக்க முடியுமோ அப்பிடியான எல்லாத்தையும் கடத்துவினம். முந்தி இஞ்ச பொருளாதார நெருக்கடிக் காலத்தில மஞ்சளுக்கு கடும் தட்டுப்பாடு. ஒரு கிலோ மஞ்சள் ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாவுக்கும் வேண்ட முடியாத சூழல். அப்ப இந்தியாவில இருந்து மஞ்சள் கடத்திக்கொண்டந்து, அதில சிலர் பிடிபட்டதையும் அறிஞ்சிருப்பியள். அப்பிடி இப்ப இந்தியாவில இருந்து பெறுமதியான புறாக்களைக் கடத்திக் கொண்டுவரத் தொடங்கியிருக்கினம். தங்கட பொழுது போக்குக்காகவும், பந்தயம் கட்டிப் பறக்க விடுறதுக்காகவும் இஞ்ச கொஞ்சப்பேர் புறாக்களை வளர்க்கினம். அவையள் நல்லாப் பறக்கக்கூடிய, நல்ல இனப்புறாக்களை என்ன விலையெண்டாலும் வாங்குவினம். அதால இந்தியாவில இருந்து நல்லினப் புறாக்களை கடலுக்கால கடத்திக்கொண்டந்து, இஞ்ச நாலைஞ்சு மடங்கு விலையைக் கூட்டி வித்து சிலர் நல்ல லாபம் பாக்கிறவை.

கிட்டடியில நெடுந்தீவில இப்பிடிப் புறாக்களை இந்தியாவில இருந்து கடத்திக்கொண்டந்து கரையில இறக்கேக்க நேவி பிடிச்சுப் போட்டுது. ஆனால் நேவி பிடிக்க முதலே இருநூறுக்கும் கூடுதலான புறாக்களை அவை இறக்கி உள்ளுக்க கொண்டுபோட்டினம். இது நேவிக்குத் தெரியாது. பிடிபட்ட அவ்வளவு புறாவையும் தான் கடத்திக் கொண்டந்தவையாக்கும் எண்டு நேவிக்காரர் நினைச்சிருக்கினம். அதுக்குப் பிறகு நாலைஞ்சு நாளைக்கு முதல் நல்லினப் புறாக்களோட ரண்டுபேர் நெடுந்தீவில இருந்து யாழ்ப்பாணம் போறதுக்காக குறிகாட்டுவானில படகில வந்து இறங்கியிருக்கினம். அங்க எண்டைக்கும் இல்லாமல் திடீரெண்டு நேவி 'செக்' பண்ணேக்க, இவையள் புறொயிலர் கோழியள் மாதிரி இந்தியப் புறாக்களைக் கொண்டந்த விசயம் பிடிபட்டுப் போட்டுது. 'நாங்கள் வளர்க்கிற புறாக்கள் இதுகள். சேர்விஸ் விட (தூர இடத்தில இருந்து தங்கட வீட்டுக்குப் பறந்து வாறதுக்கான ட்ரெயினிங் குடுக்கக்) கொண்டு போறம்' எண்டு அவையள் சொல்லி இருக்கினம்.ஆனால் அதை நேவி நம்பேலை.ரண்டுபேரையும் பிடிச்சு முறையாக் கவனிச்சதில நூற்றுக் கணக்கான புறாக்களைத் தங்கட கூட்டாளிமார் இன்னொரு இடத்தில பதுக்கிவைச் சிருக்கினமெண்டதை உளறிப்போட்டினம். அவ்வளவு தான், அந்தப் புறாக்களை மீட்கச் சொல்லி நேவிக்கு அறிவிச்சு, அவையும் உடனேயே ஸ்பொட்டுக்கு வெளிக்கிட்டினம்.

அந்தப் புறாக்களைப் நேவிக்காரர் மீட்டவையோ? உண்மையா உந்தப் புறாக்களை வளர்க்கிறதுக்கும், பந்தயத்துக்கு பறக்க விடுறதுக்கும் தான் கொண்டந்தவையோ? இல்லாட்டி வேற ஏதும் திடுக்கிடும் சங்கதியள் இருக்கோ? எல்லாத்துக்கும் பட்சி நாளைக்குப் பதில் சொல்லும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# 'ஏ.ஐ.' மாநாட்டை நடத்த இந்தியாவே பொருத்தம்

## ஐ.நா. பொதுச்செயலர் தெரிவிப்பு

**லண்டன், பெப்.17**

**உலகில் வெற்றிகரமாக வளர்ந்துவரும் இந்தியா செயற்கை நுண்ணறிவுத் (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாட்டை நடத்த பொருத்தமான இடம் என்று ஐக்கிய நாடுகள் சபை பாராட்டியுள்ளது.**

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்கம் தொடர்பான மாநாடு நடைபெற்றுவருகின்றது. இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ்ஸும் பங்கேற்கவுள்ளார்.

மனிதகுலத்தின் நன்மைக்காக செயற்கை நுண்ணறிவு தன்னை வளர்த்துக்கொள்வதும், உலகளாவிய கருவியாக மாறுவதும் மிகவும் அவசியம். உலகப் பொருளாதாரத்தில் மட்டுமின்றி, உலகளாவிய விவகாரங்களில் அதன் செல்வாக்கிலும் பெரிய பங்களிப்பை இந்தியா கொண்டுள்ளது. உலகின் மிகவும் வெற்றிகரமான வளர்ந்துவரும் பொருளாதார நாடாக உள்ள இந்தியா செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை நடத்துவதற்கு சரியான இடம். செயற்கை நுண்ணறிவின் ஆற்றல் மற்றும் அதன் அனைத்துவித ஆபத்துகள் தொடர்பாக ஆழமாக விவாதிக்கப் படுவதை உறுதி செய்யவும், செயற்கை நுண்ணறிவு முழு உலகுக்கும் என்பதை உறுதி செய்யவும் இந்தியா பொருத்தமான இடம்.

பன்முக உலகத்தை வடிவமைப்பதில் இந்தியா வகிக்கக்கூடிய பங்களிப்பின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் மோடியுடன் விவாதிப்பதில் மகிழ்ச்சி அடைவேன் என்று அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அமெரிக்காவின் கடும் தடைகளால் ஹபானோ சிகர் திருவிழா நிறுத்தம்

ஹவானா, பெப்.17

அமெரிக்காவின் கடுமையான எரிபொருள் முடக்கல் மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக, கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நடைபெறவிருந்த புகழ்பெற்ற 'ஹபானோ சிகர் திருவிழா' காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் ஐந்து நாள்கள் நடைபெறவிருந்த இந்தச் சர்வதேசத் திருவிழா, கியூபா எதிர்கொண்டுள்ள 'சிக்கலான பொருளாதாரச்சூழல்' காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று விழா ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. வருடாந்தம் நடைபெறும் சிகர் திருவிழாவில் உலகத் தரம்வாய்ந்த கியூபா சிகர் (சுருட்டு) தயாரிப்புத் தொழிற்சாலைகளைப் பார்வையிட ஒவ்வோர் ஆண்டும் சுமார் 70 நாடுகளிலிருந்து ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்வது வழக்கம். கியூபாவின் நீண்டகால நட்பு நாடான வெனிசுலாவிலிருந்து வரும் எண்ணெய்க் கப்பல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்தியதால், அந்த நாடு முழுவதும் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. எரிபொருள் பற்றாக்குறையால் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகள், நீர் இறைக்கும் நிலையங்கள் மற்றும் பொதுப்போக்குவரத்து என்பன முடங்கியுள்ளன. விமான எரிபொருள் தட்டுப்பாட்டால் பல சர்வதேச விமான நிறுவனங்கள் கியூபாவுக்கான சேவைகளை நிறுத்தியுள்ளன. கியூபா தலைவர்கள் தம்முடன் பேச்சுவார்த்தைக்கு உடன்படவேண்டும், இல்லையெனில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தி வருகின்றார். (எ-இ)

# 10 மாதக் குழந்தையால் மறுவாழ்வு பெற்ற ஐவர்

சென்னை, பெப்.17

இந்தியாவின் கேரள மாநிலத்தில் விபத்தில் உயிரிழந்த 10 மாதப் பெண் குழந்தையின் உறுப்புதானத்தால் 5 பேர் மறுவாழ்வு பெற்ற நெகிழ்ச்சிச் சம்பவம் பதிவாகியுள்ளது.

கேரள மாநிலத்தில் உள்ள பத்தனம் திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த அருண் ஆபிரகாம், ஷெரின் ஆன் ஜோன் ஆகியோரின் 10 மாதப் பெண் குழந்தை அலின் ஷெரின் ஆபிரகாம். கடந்த 5ஆம் திகதி குழந்தை தாய், தாத்தா, பாட்டி ஆகியோருடன் திருவல்லாவுக்குக் காரில் சென்றபோது எதிரே வந்த மற்றொரு காருடன் மோதி விபத்தில் சிக்கியது.

படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குழந்தை மூளைச்சாவடைந்ததை அடுத்து, பெற்றோரின் சம்மதத்துடன் குழந்தையின் கல்லீரல், சிறுநீரகங்கள், இதய வால்வு, கண்கள் என்பன தானமாக வழங்கப்பட்டுள்ளன.

குழந்தையின் கல்லீரல், திருவனந்தபுரத்தில் உள்ள 6 மாதக் குழந்தைக்குப் பொருத்தப்பட உள்ளது. சிறுநீரகங்கள், திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியில் உள்ள மற்றொரு குழந்தைக்கு வழங்கப்பட்டது. இதய வால்வு மற்றும் கண்கள் வேறு இருவருக்கு வழங்கப்பட்டுள்ளன. கேரளாவிலேயே மிகக் குறைந்த வயதில் உடல் உறுப்புத் தானம் செய்து 5 பேருக்கு மறுவாழ்வளித்த பெருமை அலின் ஷெரினுக்குக் கிடைத்திருக்கின்றது. (எ-இ)


## வேலையாட்கள் தேவை

யாழில் பிரபலமான உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணிகளுக்கு அவசரமாக பணியாட்கள் தேவைப்படுகின்றனர்.

- பாத்திரம் கழுவுபவர் (Dish Wash)
- பார்சல் கட்டுபவர், கறி கட்டுபவர் (Parcel Maker)
- உணவு பரிமாறுபவர் (Waiter)

உணவு, தங்குமிடம் இலவசம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 075 145 0713

(CS/31282) J-1



## மரண அறிவித்தல்



**சற்குணதேவி சண்முகேஸ்வரன்**

இணுவிலை பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணதேவி சண்முகேஸ்வரன் நேற்று (16.02.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரலிங்கம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரன், தனலட்சுமி, கோமதிதேவி, ஸ்ரீராமசந்திரன், பாலசந்திரன், மனோரஞ்சினி, ரவிச்சந்திரன், ஜெகதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நர்மதா, நிருஷிகா, நேசராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், வஜிதரன், மிதுனன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்திரவதனி, காலஞ்சென்ற சண்முகதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்கன் வளவு,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 2125 195
076 5371 984

(CS 31283) A



## மரண அறிவித்தல்



**புவனேஸ்வரன் கிருஸ்ணகுமாரி (கண்டுச்சித்தி)**

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரன் கிருஸ்ணகுமாரி (கண்டுச்சித்தி) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி - சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், புவனேஸ்வரனின் மனைவியும், தினேஸ், நிருத்திகா, கவிதா, கயல்விழி, தனுலக்சன் ஆகியோரின் தாயாரும், சோபிகா, தயாபரன், லதீபன் ஆகியோரின் மாமியாரும், செல்வேந்திரகுமாரி (கனடா), விஜயகனகராணி (கனடா), ரவீந்திரகுமார் (அமரர்), திலகவதி (கனடா) ஆகியோரின் சகோதரியும், சண்முகநாதன் (அமரர்), விசுவலிங்கம் (அமரர்), தர்மகுலேந்திரன் (அமரர்), நாகராசா (அமரர்), ருக்குமணிதேவி (அமரர்), புஸ்பராணி, தர்மரத்தினம் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், சத்வீகன், திலக்சிகா, தியானேஸ், சன்விகா ஆகியோரின் பேர்த்தியும், சுதாகரன் (கனடா), பகீரதன் (கனடா), சுதர்சினி (கனடா), தட்சாயினி (கனடா), அகிலன் (கனடா), அரவிந்தன் (இந்தியா), பாஸ்கரன் (கனடா), பிரமிளா (கனடா), விமலன் (கனடா), தர்சிகா (கனடா), தனுசன் (கனடா), சந்திரகுமார் (பிரான்ஸ்), உதயமாலினி (கனடா), சசிகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமார் (பிரான்ஸ்), பவனிதா (நோர்வே), ஆதவன் (நோர்வே) ஆகியோரின் சிறிய தாயாரும், தர்சிகாவின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2026) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
0777 849 612

(CS 31284) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## வெடுக்குநாறிமலைச் சுமுகநிலை தொடருமா?

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இம்முறை மகா சிவராத்திரி வழிபாடுகள் எவ்விதத் தடங்கலுமின்றி சுமுகமாக இடம்பெற்றுள்ள செய்தி, ஒரு நிம்மதிப் பெருமூச்சைத் தந்துள்ள அதேவேளை, கடந்த காலங்களின் கசப்பான நினைவுகளையும் மீள அசைபோட வைக்கின்றது. கடந்த 2024ஆம் ஆண்டு இதே சிவராத்திரிப் பொழுதில், பூசகர் உள்ளிட்ட எட்டுப் பேர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டதும், பக்தர்களுக்குக் குடிநீர் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டதும், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தடியடித் தாக்குதல்களும் ஜனநாயகத்தின் மீது விழுந்த அழியாத கறைகளாகும். பூர்வீக வழிபாட்டிடங்களில் தமிழர்கள் சுதந்திரமாக வழிபடுவதைப் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டித் தடுத்ததும், தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு மக்களின் அடிப்படை வழிபாட்டுரிமையில் பொலிஸார் மூக்கைநுழைத்ததும் தேவையற்ற முரண்பாடுகளையே தோற்றுவித்தன. இந்த வருடம் நிலவிய அமைதியான சூழல், ஒரு விடயத்தை ஆணித்தரமாக நிருபித்துள்ளது; அதாவது, ஆட்சியாளர்களும் பொலிஸாரும் திட்டமிட்டு இடையூறு செய்யாதவரை, எந்தவொரு வழிபாட்டுத்தலத்திலும் முரண்பாடுகள் தானாக உருவாவதில்லை என்பதே அதுவாகும்.

அப்போதைய ஆட்சியாளர்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கும், மேலாதிக்கச் சிந்தனைக்கும் பொலிஸார் கருவியாகச் செயற்பட்டதன் விளைவாகவே வெடுக்குநாறிமலை ஒரு போர்க்களமாக மாற்றப்பட்டது. ஆனால், இம்முறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் விடுத்த அழுத்தமான கோரிக்கையும், அதற்குப் பதிலளிக்கும் வகையில் 'சுதந்திரமான வழிபாட்டுக்கு இடமளிக்கப்படும்' என அரச தரப்பு வழங்கிய உறுதிமொழியும் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தமது உரிமைக்காக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் போராடிக் களைத்த தமிழ் மக்கள், தங்கள் ஆன்மிகத் தேவைகளுக்காகக்கூட வீதிக்கு வந்து போராடவேண்டிய அவலநிலை இனியாவது முடிவுக்கு வரவேண்டும். ஒரு நாட்டின் அமைதி என்பது அங்குள்ள சிறுபான்மை மக்களின் உரிமைகள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி அங்கீகரிக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில், வெடுக்குநாறியில் இம்முறை தென்பட்ட சுமுகநிலை என்பது வெறும் ஒரு நாள் நிகழ்வாகப் பார்க்கப்படாமல், வடக்கு-கிழக்கிலுள்ள அனைத்து ஆக்கிரமிக்கப்பட்ட வழிபாட்டிடங்களுக்குமான ஒரு முன்மாதிரியாக மாற்றப்படவேண்டும்.

அத்துமீறிய வனவளத்திணைக்களக் கட்டுப்பாடுகள் மற்றும் போக்குவரத்துச் சிரமங்களுக்கு மத்தியிலும் பெருந்திரளான பக்தர்கள் இம்முறை திரண்டமை, மக்களின் உணர்வுகளை அடக்குமுறையாலோ சட்டத் தந்திரங்களாலோ முடக்கிவிடமுடியாது என்பதைக் காட்டுகிறது. அதேவேளை, ஆலயத்திற்குச் செல்லும் பாதையைச் சீரமைப்பதிலுள்ள திணைக்களத் தடைகளை நீக்கி, பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தவேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாகும். பொலிஸார் 'கண்காணிப்பு' என்ற பெயரில் மக்களை அச்சுறுத்தாமல், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தரப்பாக மட்டுமே இருந்தால், தேவையற்ற சர்ச்சைகளும் சர்வதேச ரீதியிலான மனித உரிமை விமர்சனங்களும் தானாகவே மறைந்துவிடும். வெடுக்குநாறியில் இம்முறை மலர்ந்த இந்தச் சுமுகநிலை, ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக இல்லாமல், தமிழர்களின் பூர்வீக நிலங்கள் மற்றும் வழிபாட்டுரிமைகளைப் பேணுவதற்கான ஒரு நிரந்தரக் கொள்கையாக மாறவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







### பொய்யாமொழி

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து**

**பொருள்:** மற்றவரையும் அறநெறியில் ஒழுகச் செய்து, தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்வாரைவிட மிக்க வல்லமை உடைய வாழ்க்கையாகும்.




## புதிய மின் கட்டணத் திருத்தத்துக்கு மின்பாவனையாளர் சங்கம் எதிர்ப்பு

**கொழும்பு, பெப்.17**
**புதிய மின்சாரக் கட்டணத் திருத்தத்துக்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள நிலையில், வருடத்தில் ஒவ்வொரு காலாண்டும் மின்கட்டணத்தை அதிகரிப்பது சட்டவிரோதமானது என்றும் மின்சார சபை தவறான செயலொழுங்கை உருவாக்க முயற்சிக்கிறது என்றும் மின் பாவனையாளர் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.**

2026ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டுக்காக மின்கட்டணத்தை 13.56 சதவீதத்தால் அதிகரிக்க அனுமதி வழங்கவேண்டும் என்று, இலங்கை மின்சாரசபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்னுற்பத்திக்கான செலவு அதிகரிப்பு மற்றும் மின்பாவனைக்கான கேள்வி அதிகரிப்பு ஆகிய காரணிகளால் மின்கட்டணத்தை அதிகரிக்கும்யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் புதிய கட்டணத் திருத்தத்துக்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். (க-இ)



## முன்னாள் சிப்பாய் தோட்டாக்களுடன் கைது

கொழும்பு, பெப்.17
வத்தளை, கால சந்திப் பகுதியில் தோட்டாக்களுடன் கூடிய பொதியொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அந்தப் பொதியில் இருந்து ரி56 ரக துப்பாக்கிக்கான 4 தோட்டாக்கள், ரிவோல்வர் ரக 4 தோட்டாக்கள், பிஸ்டல் ரக 2 தோட்டாக்கள் மற்றும் 11 சிம் அட்டைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபரிடம் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு 72 மணித்தியால தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## போதைப்பொருள் கடத்திய மூவர் கைது

கொழும்பு, பெப்.17
16 கிலோகிராம் குஷ் போதைப் பொருளைக் கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாகக் கடத்திய, பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர், விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டனர். தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கொள்வனவு செய்த போதைப்பொருளுடன்,
டுபாய் ஊடாக எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம், மூவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவர்களின் பயணப்பொதி
களிலிருந்து 60 பொதிகளாக பொதி செய்யப்பட்டிருந்த 16 கிலோ 400 கிராம் குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. (க-இ)

## புத்தளம் ரயில் சேவை நேற்றுமுதல் வழமைக்கு

புத்தளம், பெப்.17
டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட புத்தளம் மார்க்கத்தின் ஊடான ரயில் சேவைகள் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
புத்தளம் ரயில் மார்க்கம் முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளது என்றும், முன்னதாக சிலாபம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகள் புத்தளம் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-41)

## சுற்றுலா, விவசாய முதலீடுகளுக்கு 10 வருடங்கள் வரை வரிச்சலுகை

சுற்றுலா, உற்பத்தி மற்றும் விவசாயத் துறைகளில் மூலோபாய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முதலீடுகளுக்கு, 10 வருடங்கள் வரை வரிச்சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 50 மில்லியன் டொலர் முதல் 300 மில்லியன் டொலர் வரையிலான முதலீடுகளுக்கு இந்த வரிச்சலுகை வழங்கப்படவுள்ளது. இந்த முதலீட்டின் மூலம் குறைந்தது 50 உள்நாட்டு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும். தொடர்புடைய முதலீடுகளுக்கு 5 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை நிறுவன வருமான வரியிலிருந்து, விலக்களிக்க முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மூலதனப் பொருள்கள் மற்றும் கட்டுமானப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் வரிச்சலுகை வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (க-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் நாட்டுக்கு அவசியமே இல்லை!

## ஜெபரட்ணம் அடிகளார் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப்.17**

**எமது நாட்டுக்குப் பழைய பயங்கரவாதத் தடைச்சட்டமும் தேவையில்லை, புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டமும் அவசியமில்லை என யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் எதிர்காலத்தில் கொண்டுவர முயற்சிக்கின்ற பயங்கரவாதம் தொடர்பான சட்டவரைவுக்கு எதிரான கையொப்பப் போராட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்ட பின்னர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- எமது நாட்டில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமாக தமிழ் மக்கள் செல்லொணாத் துயரங்களை அனுபவித்தார்கள். எத்தனையோ பேரின் வாழ்க்கையில் கவலைகளும், வலிகளும், இழப்புக்களும் ஏற்பட்டன.

இந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அரசாங்கங்களைத் தமிழ் மக்களாகிய நாங்கள் தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் தற்போது அந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குகின்ற பாணியில் புதிய ஒரு சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய சட்டத்தின் மூலமாகவும் தமிழ் மக்களுக்கு பிரதானமான பாதிப்புகள் ஏற்படும். இதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையானது தொடர்ச்சியாக பயத்தின் மத்தியிலேயே தொடரக்கூடிய வாய்ப்புள்ளது. எமது இந்தக் கோரிக்கையை அரசாங்கமானது ஏற்று, தமிழ்மக்களுடையஅபிலாஷைகளைப் பூர்த்திசெய்து தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்தவேண்டும்-என்றார். (எ-இ)

# க.பொ.த. சா/த பரீட்சையின் அட்டவணையில் அவதானம்

கொழும்பு, பெப்.17

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் நேர அட்டவணை தொடர்பாக விசேட அவதானம் செலுத்தவேண்டும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று ஆரம்பமாகவுள்ள பரீட்சை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் உள்ள நேர அட்டவணையை மட்டும் பின்பற்றவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். கடந்த ஆண்டைவிட இம்முறை சாதாரண தரப் பரீட்சையின் ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது நாள்களுக்கான பாடங்களின் வரிசை முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், சரியான நேர அட்டவணையைப் பயன்படுத்தவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

காலை 8.30 மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளன. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னதாக நிலையங்களுக்குச் செல்லவேண்டும். பிற்பகல் நேரப் பரீட்சைகள் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. பரீட்சார்த்திகள் மதியம் 12.30 மணிக்குள் பரீட்சை நிலையங்களுக்கு வரவேண்டும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கையெழுத்துப்போராட்டம் தொடர்ந்து முன்னெடுப்பு

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டமும், இனிமேல்கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டமும் வேண்டாம் என வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் இல்லத்திலும் முன்னெடுக்கப்பட்டது. தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், ஏனைய மதகுருக்கள் இந்தச் சட்டங்களை எதிர்த்துக் கையொப்பமிட்டனர். புலம்பெயர் தேசங்களில் வசிக்கின்ற உறவுகளும் கையொப்பமிடும் வகையில் இணையவழி மூலமான கையொப்பமிடும் வசதியும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. (எ-27)





# சுகாதாரத் தரவுகள் வெளியிடுவதைக் கைவிடவுள்ள மருத்துவ அதிகாரிகள்

கொழும்பு, பெப்.17

சுகாதாரத் தரவுகளை வெளியிடுவதில் இருந்து எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் விலகத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் பிரபாத் சுகததாச இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் தேவையான மருத்துவ அதிகாரிகள் இல்லை. சில சமயங்களில் தேவையான மேலதிக சுகாதார அதிகாரிகள் இல்லை. இதனால் பொது மக்களுக்குச் சேவைகளை வழங்கும் போது அதிக சுமையை ஏற்கவேண்டியுள்ளது. ஏனைய ஊழியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நலச் தாதியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியாலேயே இந்தச் சேவை வழங்கப்படுகிறது. இவர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. பல பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே இன்றும் இந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வலியுறுத்தி தரவுகளை வழங்குவதில் இருந்து விலக சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இந்தத் தரவுகள் மூலமே தற்போதுள்ள நிலைமை தொடர்பாக பகுப்பாய்வுகள் செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் தொடர்பாகவும் தீர்மானிக்கப்படுகின்றது. நாட்டின் சுகாதாரத்தைப் பொறுத்தவரை இந்தத் தரவுகள் மிகவும்முக்கியமானவையாகும் -என்றார். (எ-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. பிற்பகலுக்குமேல் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் திடீர்ச் செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுப்பதில்பொறுமை மிக அவசியம். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரனையாக நடந்து கொள்ளவும். கணவன் - மனைவிக்கிடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிலும் ஒரு பிடிப்பில்லாத மன நிலை ஏற்படக்கூடும். வழிபாட்டின்மூலம் தெளிவு பெற முயற்சிக்கவும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கக்கூடும். வாழ்க்கைத் துணை முரண்டு பிடித்தாலும் கடுமை காட்டாமல் விட்டுக்கொடுத்துச் செல்லவும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தந்தைவழி உறவினர்களால்சில பிரச்சினைகள் குடும்பத்தில் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் நண்பர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும்.

**சிம்மம்:** மனதில்நம்பிக்கையும் உற்சாகமும் நிறைந்திருக்கும். வீட்டிலும் வெளியிலும் மரியாதை அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகள் தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். பிள்ளைகள் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**தனுசு:** உடன் பிறந்தவர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். கணவன்-மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்லவும்.

**மகரம்:** குடும்பத்து உறவினர்களுடன் வீண்விவாதம் செய்யாமல் இருப்பதன் மூலம் மனஅமைதி கிடைக்கும். நண்பர்களுக்காக செலவுசெய்ய நேரிடும்.

**கும்பம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும்.

**மீனம்:** பணவரவு அதிகரிக்க வாய்ப்புண்டு. நினைத்த காரியங்களை நினைத்தபடி முடித்துக்காட்டுவீர்கள். முயற்சிகள் சாதகமாகமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டின் இனவாதப்போராட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்டது பெண்களே

## பிரதமர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.17

**நாட்டில் இடம்பெற்ற இனவாதப் போராட்டத்தில் அதிகம் பரதிக்கப்பட்டது பெண்களே. போர் முடிந்து நீண்ட வருடங்களாகியும், மக்களின் உள்ளங்களில் இன்னும் அமைதி இல்லை. தங்கள் குடும்பங்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியாத பெண்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். மன்னார், அடம்பன் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மன்னார் மாவட்ட மகளிர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மாற்றியமைக்க எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. ஆரம்பிக்கப்பட்டுள்ள மாற்றத்தை முன்னெடுத்துச்செல்ல பெண்களும் முன்வரவேண்டும்.

எங்களது அரசாங்கம் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. நாட்டில் உள்ள முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக இருந்தது போர். போர் காரணமாக நாம் பிளவுபட்ட நாடாக மாறினோம். இதனால், பெண்கள் அதிகளவில் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். நாட்டின் பெரும்பான்மையான பெண்கள் தாய், தந்தை, மகன், மகள், சகோதர, சகோதரிகள் இல்லாமல் தவிப்பதை நாம் அறிவோம்.

தனியாகக் குடும்பத்தை நடத்துவதற்கு உழைக்கும் பெண்களே ஏராளம். இனவெறியால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான். இனவாதத்துக்கு எதிராக எமது அரசாங்கம் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

நீதிமன்றம் சுயாதீனமான முடிவுகளை எடுக்கின்றது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் சட்டம் சிறப்பாகச் செயற்படவேண்டும்-என்றார். (க-56)

# பொதுமக்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலையிலாம்!

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, பெப்.17

சட்டத்தரணி ஒருவரே பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்படும்போது, பொதுமக்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலையிலேயே உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பத்தரமுல்ல பகுதியில் ஜனாதிபதி வசிக்கும் இடத்தை அண்மித்தே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. பொதுமக்களைத் தூண்டி, பல்வேறு விடயங்களை அரசாங்கம் சாதித்துக்கொள்ளவதற்கு நினைக்கின்றது. அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலுக்கு எதிராகச் செயற்படும் அரசியற்கட்சிகள் அடக்கப்பட்டு அவர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள். 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிரட்டல்களை விடுத்தவர்களே தற்போது அரசாங்கத்திலும் இருப்பதால், அவர்களுக்கு அச்சுறுத்தும் மொழி மாத்திரமே தெரியும்-என்றார். (எ-இ)

# மத்திய சுகாதார அமைச்சின் கீழ் 3ஆம் நிலை பராமரிப்புச் சேவை

## ஆராய்கின்றது அரசாங்கம்

தற்போது மாகாணசபைகளின் கீழ் உள்ள மூன்றாம் நிலை பராமரிப்புச் சேவைகளை வழங்கும் அனைத்து மருத்துவமனைகளையும், மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சின்கீழ் கொண்டுவருவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாகாணசபைகளின்கீழ் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்புப் பிரிவுகள் இயங்குவது சிறப்பாக அமைந்தாலும், விசேட சிகிச்சைகளை வழங்கும் மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகள் மத்திய அரசாங்கத்தின்கீழ் இயங்குவது அவசியமாகும். பிரதேசத் தேவைகளைக் கருத்திற்கொண்டு கட்டம் கட்டமாக இந்த மருத்துவமனைகள் பொறுப்பேற்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் ஒரு வருடத்துக்குள் செலவிடக்கூடிய நிதியை மதிப்பிட்டு, முறையான திட்டமிடலுடன் செயற்பட்டுவருகிறது. வினைத்திறனுடன் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் மருத்துவமனைக்கு அதிகப்படியான நிதியை வழங்க நாம் தயங்கப்போவதில்லை-என்றார். (எ-இ)

# வழங்கிய வாக்குறுதியை மீறிச் செயற்படுகின்றது அரசாங்கம்

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.17

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதாக வழங்கிய வாக்குறுதியை மீறி, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவைக் கொண்டுவர முயற்சிப்பது பெரும் ஒழுக்கநெறி மீறல் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பயங்கரவாதத் தடைச்சட்டதை இரத்துச்செய்ய வேண்டும் என்று உரத்துக் குரல் கொடுத்தவர்களில் அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இருந்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக ஒழிப்போம் என்று கூறிவிட்டு, தற்போது அதற்குப் பதிலாக மாற்றுச் சட்டமொன்றைக் கொண்டுவருவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

அரசுக்கு எதிராக ஆயுத வன்முறையினை இயக்கங்களோ அல்லது ஏனையோரோ செயற்படுத்தும்போது பயங்கரவாதத் தடைச்சட்ட்ச் சரத்துகளைப் பயன்படுத்தலாம்.

ஆனால் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை முற்றிலும் எதிர்க்கிறோம். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் பொறுப்பாகும்-என்றார். (எ-இ)



# இனவாதத்தைத் தூண்டவே தொடர் துப்பாக்கிச்சூடுகள்

## சரத் பொன்சேகா அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப்.17

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால், தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது. இனவாதத்தைத் தூண்டவே இத்தகைய சம்பவங்கள் அரங்கேறுகின்றன என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- ஒன்று அல்லது இரண்டு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது. தற்போதைய அரசாங்கம் இதுகுறித்து புரிதலுடன் இருக்கும் என நம்புகின்றேன். வெவ்வேறு குழுக்கள், கடந்த காலத்திலும் கலகங்களை விளைவிப்பது, இனவாதத்தைத் தூண்டுவது போன்ற விடயங்களில் பழக்கப்பட்டிருந்தன. இப்படியானவர்கள் தமக்கென ஒரு பிம்பத்தை உருவாக்கிக்கொள்ளத் தேவைப்படும்போது பல்வேறு விடயங்களைச் செய்ய முயற்சிக்கின்றனர். ஒரு சிறிய சம்பவத்தைச் செய்வதற்கு ஒருவரோ, இருவரோ இருந்தால் போதுமானது. பதற்றமடையத் தேவையில்லை. அரசாங்கம் எப்படியும் இதனைப் புரிந்துகொண்டிருக்கும். இந்த நாட்டில் கடந்த காலத்தில் நடந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களுக்கு ஓரளவுக் குப் புரிதல் உள்ளது. எனவே அவர்களால் இதனைத் தற்போது முகாமைத்துவம் செய்ய முடிந்திருக்கும் என நான் நினைக்கிறேன்-என்றார். (க-இ)

மறைந்த லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் முன்னாள் சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுமுன்தினம் இறுதி அஞ்சலி செலுத்தினார். பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் என்.எம். பெரேரா நிலையத்திற்குச் சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.02.2026 செவ்வாய்க்கிழமை

# முல்லைத்தீவு, வவுனியா வடக்கில் நெற்கொள்வனவைத் துரிதமாக்குக

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு,பெப்.17

முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் வவுனியா வடக்கில், நெற்கொள்வனவு நடவடிக்கைகளை, நெல் சந்தைப்படுத்தல் சபை துரிதப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்தார். வவுனியா வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். வவுனியா வடக்கிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் எம்மிடம் முறையிட்டுள்ளனர். நெல்சந்தைப்படுத்தல் சபை உரிய காலத்தில் நெற்கொள்வனவை மேற்கொள்ளாத காரணத்தால், தனியார் நெற்கொள்வனவாளர் களிடம் விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். எனவே முல்லைத்தீவுக் களஞ்சியசாலைகளில் இருப்பிலுள்ள நெல்லை அகற்றி, உடனடியாக புதிய நெற்கொள்வனவை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த, ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், பிரதிய மைச்சருமான உபாலி சமரசிங்க, ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லை சதொச மற்றும்கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் படி ஜனாதிபதியாலும் உத்தர விடப்பட்டிருந்தது. என வே விரைவில் களஞ்சியசாலைகளிலுள்ளநெல்லை முற்றாக அகற்றி, விவசாயிகளிடமிருந்து புதிய நெற் கொள்வனவை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார்.

(க-246)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர் வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் செ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் து.இளமுருகன் பங்கேற்கவுள்ளார்.

(ச)


## பெயர் மாற்றம்

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி இல் வதியும் தெய்வேந்திரம் ஈவரன் ஆகிய நான் எனது பெயரை தெய்வேந்திரம் ஈஸ்வரன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் தெய்வேந்திரம் ஈஸ்வரன் என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

தெய்வேந்திரம் ஈஸ்வரன்

(CS/60762) J-1

## காணி உடனடி விற்பனைக்கு


யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.

விபரங்களுக்கு:

074 300 7992

WhatsApp +44 7414 942508

## நினைவழியா ஏழாம் ஆண்டு



எங்களிடம் 12 . 04 . 1938

இறைவனிடம் 06 . 03 . 2019

அமரர் வைத்திய கலாநிதி

**நடராஜா சிவராஜா**

திதி: அமரபக்க அமாவாசை

இறைவன் எப்படி இருப்பார் என்பது தெரியவில்லை ஆனால் அவர் வடிவில் உங்களைப் போன்ற சில மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.


உங்கள் ஆன்மா இறைவனடியில் சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

47/3, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மலைஅரசி சிவராஜா
மற்றும் குடும்பத்தினர்

(CS/60761) J-1

## ஈரவிழிகளுடன் ஏழாண்டு நினைவலைகள்



அமரர்

**பேரம்பலம் நடேசபிள்ளை**

எம் வாழ்வின் வழிகாட்டியாய்...
எங்கள் குலத்தின் வேராய்...
காலமெல்லாம் எங்களை வழிநடத்திய தெய்வமே!
தேடி வந்தவர்கெல்லாம் விருந்தளித்து மகிழ்ந்த
உங்கள் நல் உள்ளமும், தன்னலம் கருதாது
பிறர் நலனுக்காக பாடுபட்ட உங்கள் அர்ப்பணிப்பும்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் எம்
அனைவராலும் மறக்கப்படாதது...
நிழல் தந்த விருட்சம் சாய்ந்திடினும் அதன்
விதைகளாகிய நாங்கள், உங்கள் நினைவுகளோடு
விருட்சமாய் வளர்கின்றோம்!
நீங்கள் காட்டிய பாசமும், நேர்மையும்
என்றும் எம்மை வழிநடத்தும்....

அன்னையின் மடியில் 23.04.1940


வேரக்கேனியான் அடியில் 06.03.2019

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(CS/60765) J-1

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 04 . 1964

மறைவு 12 . 03 . 2021


**திரு. வேலாயுதபிள்ளை விஜயகுமார்**

கண் முன்னே வாழ்ந்த காலம்,
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்,
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து,
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல், கனகாலம் இருப்பீர்கள்...

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/60754) J-1

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 . 09 . 1955

மறைவு 02 . 03 . 2022

**அமரர் பொன்னுத்துரை சிறீகரன்**

திதி: மாசி அமாவாசை

நான்கு ஆண்டுகள் உருண்டோடிப் போனது
உங்கள் வையக இருப்பு மறைந்து
அந்த வெற்றிடம் இன்னும் அப்படியே இருக்கிறது நிரப்ப முடியாமல்
நீங்கள் வாழ்ந்த போது கற்றுத்தந்தவையும்
நீங்கிய போது கற்றவையும்
வாழ்க்கைச் சக்கரத்தை நகர்துவதற்கு அச்சாணியாக உள்ளன
உங்கள் ஆசிகளுடனும் நினைவுகளுடனும் என்றும் நாம் இருக்க
சொர்க்கமதில் நிறைவாய் நிறைந்திடுங்கள்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி...

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/60764) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள்: ஐ. சிவசாந்தன்





நல்லூர் சிவன் ஆலயத்தில் மாசி மகாசிவ ராத்திரிப் பூஜை வழிபாடுகள் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடை பெற்றன. (எ-41)

மன்னாரில் பிரசித்திபெற்ற தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகாசிவ ராத்திரி வழிபாடுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக் கணக்கான பக்தர்கள் பூசைகளில் கலந்துகொண்டனர். காலை தொடக்கம் பல்வேறுபட்ட சமய நிகழ்வுகள் பூஜைகள் இடம்பெற்றதுடன் சொற்பொழிவு களும் இடம்பெற்றன. (எ-41-56)






மகாசிவராத்திரியை முன்னிட்டுக் கீரிமலை இந்துமா சமுத்திரக் கரையில் ஈழத்துச் சித்தர்களான குழந்தைவேல் சித்தர், அருளம்பலச் சித்தர்கள் வீற்றிருக்கும் சமாதி சிவாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் அடியவர்கள் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து, திருமுறைகள் பாராயணம் செய்து வழிபட்டனர். (எ-41-66)



கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்திபெற்ற கரைச்சி புளியம்பொக்கணை நாக தம்பிரான் ஆலயத்தில் சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. வழிபாடுகளில் விரதம் அனுஷ்டிக்கும் அடி யவர்கள் தமது கரங்களால் சிவனுக்குப் பூவும் நீரும் ஊற்றி நிவர்த்தியை நிறைவு செய்தனர். தொடர்ந்து 6 சாம காலபூஜை வழிபாடுகள் இடம்பெற் றன. (எ-41)



மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்களின் கட்டுறு பயில்வு (துண்டக் கற்பித்தல்) கற்றல் கற்பித்தல் சாதனங்களின் கண்காட்சி நடைபெற்றது. கல்லூரியின் பீடாதிபதி ரி. கணேசரத்தினம் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். கண்காட்சியை மாணவ ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் பார்வையிட்டனர். (எ-159)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 15ஆவது நாள் உற்சவமான தீர்த்தத் திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை காலை கீரிமலைக் கண்டகி தீர்த்தக் கடலில் இடம்பெற்றது. (எ-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதையை...

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் 35 வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் விடுவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மாதத்தில் சில நாள்கள் கடும் கட்டுப்பாடுகளுடனும், பின்னர் எந்தத் தடையும் இன்றியும் வழிபாடுகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கான பாதை விடுவிக்கப்படவில்லை. தனியார் காணிகள் மற்றும் பிறிதொரு ஆலயக் காணி என்பவற்றை ஊடறுத்து அமைக்கப்பட்ட தற்காலிகப் பாதை ஊடாகவே மக்கள் இதுவரை இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்குச் சென்று வந்தனர்.

இவ்வாறு அமைக்கப்பட்ட தற்காலிகப் பாதையை நிரந்தரமாக மாற்றும் வகையில், இராணுவத்தினர் நேற்று சீரமைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதற்கு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், பிரதேச செயலகத்திலும் முறைப்பாடு வழங்கினார்கள். இதையடுத்து, அந்தப் பணிகள் படையினரால் கைவிடப்பட்டுள்ளன.

ஆலயத்தின் பிரத்தியேகப் பாதையை விடுவித்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி.வடக்கில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் ஒருதொகுதி காணிகள் விடுவிக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையிலேயே, ஆலயத்தின் நிரந்தரப் பாதையை ஆக்கிரமிக்கும் வகையில் இராணுவம் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழ்...

தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் தர்சானந்த் இந்தப் பிரேரணையை முன்வைத்தார். குறித்த பழக்கடைகளை மீள அளவீடு செய்து முறையாக ஒழுங்கமைக்க வேண்டும் என்றும், மாநகர உறுப்பினர்கள் அங்கு களவிஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

அவரின் பிரேரணை ஏற்கப்பட்டது. எனினும், முதலில் யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரிகள் அங்கு சென்று ஒழுங்கமைப்புப் பணிகளை மேற்கொள்வது என்றும், பின்னர் விரும்பிய உறுப்பினர்கள் களப் பயணங்களை மேற்கொள்வார்கள் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-26)

## 'பிரஜா...

நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரஜாசக்தி திட்டத்துக்கு எதிராக, வடக்கு - கிழக்கு மாகாணங்கில் உள்ள பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாநகரசபையிலும் அத்தகைய பிரேரணையொன்று பிரதிமேயர் இம்மானுவேல் தயாளனால் நேற்றுக் கொண்டுவரப்பட்டது.

இதற்கு, தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியப் பேரவை, ஈ.பி.டி.பி. உள்ளிட்ட தரப்புகள் ஆதரவு தெரிவித்தன. தேசிய மக்கள் சக்தியினர் பிரேரணையை எதிர்த்த போதிலும், பெரும்பான்மை அடிப்படையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளும் தரப்பைச் சேர்ந்த ஒருவர் பிரஜா சக்தி குழுவில் உள்ளார் என்று தேசிய மக்கள் சக்தியின் மாநகர உறுப்பினர் கபிலன் தெரிவித்தார். சபை நாகரீகம் கருதி அவருடைய பெயரை வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார். (அ-ம-26)

## தமிழக...

சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட கடற்படையாலேயே தமிழக மீனவர்கள் 25 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு படகுகளும் இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன. விசாரணைக்குப் பின்னர் அவர்கள் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் நீரியல்வளத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கைது நடவடிக்கைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சுக்கும், இந்தியப் பிரதமர் அலுவலகத்துக்கும் அவர் கடிதம் அனுப்பியுள்ளார். (அ-ம-26-100-66)

## கோப்பாயில்...

டுள்ளார். காணிப் பிணக்கு காரணமாகவே இந்தப் படுகொலை இடம்பெற்றதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியியல் கல்லூரிக்கு அருகில் இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபருக்கும் பிறிதொரு நபருக்கும் இடையில் நீண்ட காலமாக காணிப் பிரச்சனை நிலவிவந்த நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை பிரச்சினை முற்றி கைகலப்பாக மாறியுள்ளது. இதன்போது மூவர் இணைந்து மண்வெட்டியால் தாக்குலை மேற்கொண்டதில் அந்த நபர் உயிரிழந்தார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சந்தேகநபர்கள் மூவரையும் அடையாளம் கண்டுள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-26)

## யாழ்ப்பாணப்...

உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா தொடர்பான ஊடக சந்திப்பு, நேற்று திங்கட்கிழமை நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில், பல்கலைக்கழக சபை அறையில் நடைபெற்றது. இதன்போது முன்னாள் கலைப்பீடாதியும், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்குழுத் தலைவருமான பேராசிரியர் சி.ரகுராம் பட்டமளிப்பு விழா பற்றி விளக்கமளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

இம்முறை பட்டமளிப்பு விழாவின் போது, 376 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 557 உள்வாரி மாணவர்களுக்கும், 252 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 66 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் ஒருவருக்கு வியாபார நிர்வாகத்தில் சான்றிதழ் அடங்கலாக 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வேந்தர் தகைசார் பேராசிரியர் இராஜரட்ணம் குமாரவடிவேல் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடம், கலைப்பீடம், விஞ்ஞானபீடம், விவசாயபீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், இந்துக்கற்கைள் பீடம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமை மூலம் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 94 தங்கப்பதக்கங்களும், 69 பரிசில்களும், 15 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் சீர்பெறும் விருதான பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவிருக்கின்றன. இதன்படி 2021ஆம் கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அடிப்படையிலான தங்கப்பதக்கத்தைக் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஒருவர் பெற்றுக் கொள்கின்றார்.

பட்டமளிப்பு வைபவத்துக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகளாக சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரை மார்ச் மாதம் 5ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கும் இடம்பெறவிருக்கின்றது.

சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் தொடர்பியல் துறையின் ஓய்வுபெற்ற துணைப் பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, 'சமூக ஈடுபாட்டுடன் செயற்படும் பல்கலைக்கழகம்: ஆய்வு, உரையாடல் மற்றும் நீர்வளப் பாதுகாப்புகுறித்த ஆழ்ந்த சிந்தனைகள்' என்ற தலைப்பிலும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் குழந்தை மருத்துவத் துறையைச் சேர்ந்த இருக்கைப் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் 'அடுத்த தலைமுறையைப் பேணிப் பாதுகாப்பது: குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்த சமகாலக் கண்ணோட்டங்கள்' என்ற தலைப்பிலும் நிகழ்த்தவிருக்கின்றனர் - என்றார். (அ-ம)

## பெரும்...

மாக துப்பாக்கிச் சூடுகள் அதிகரித்து வருகின்றன. சட்டத்தரணி ஒருவரும் அவருடைய மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, 'இலங்கை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தலில் தள்ளப்பட்டுள்ளது' என்று சாகர காரியவசம் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இதுவரை மூன்று போர்களை எதிர்கொண்டது. ஜே.வி.பி.யால் இரண்டு தடவைகளும், விடுதலைப் புலிகளால் ஒரு தடவையும் இவ்வாறு உள்நாட்டுப் போர்களும் கலவரங்களும் ஏற்படுத்தப்பட்டன. அந்தக் காலங்களில்கூட தேசியப் பாதுகாப்பு இவ்வளவுதூரம் மோசமடையவில்லை.

நாட்டு மக்கள் அச்சத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த வருடம் 111 துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றன. இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 9 துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளன. அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் தரப்பினர் ஏதோவொரு விதத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். இதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் - என்றார். (அ-ம-44)

## பொதுப்...

துப்பாக்கிச் சூடுகளைத் தொடர்ந்தே, பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவை பதவி விலகுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன வலியுறுத்தியுள்ளன.

சட்டத்தரணி புத்திக மல்லவாரச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. மேற்படி சம்பவம் நாட்டின் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 'தமது பணியை சரிவர செய்யமுடியாவிட்டால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவிவிலகி வீடு செல்ல வேண்டும்' என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியும் இதே சாரப்பட கருத்துகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வலி....

ஆக்கிரமிப்பால் காணிகளை இழந்துள்ள உரிமையாளர்களே யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் இந்த மனுவை அவரிடம் கையளித்தனர்.

இதேவேளை, எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வலிகாமம் வடக்கில் ஒருதொகுதி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிய நாயகன்

# திருப்பாடுகளின் நாடகத்துக்கு பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், பெப். 17

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

நாளை மாலை 4.30 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி' தியான இல்லத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் அருட்தந்தை சா.ம.செல்வரட்ணம் (அ.ம.தி.) அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த வருடம் திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களுக்கு 'காவிய நாயகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. (ம)

# கார் - மோ.சைக்கிள் விபத்து இரண்டு பேர் பரிதாபச் சாவு

மாங்குளத்தில் சோகம்

முல்லைத்தீவு, பெப். 18

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மோட்டார்சைக்கிளும், காரும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவரும் உயிரிழந்தனர்.

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அறிவியல் நகருக்கு அண்மித்ததாக நேற்றுமுன்தினம் இந்த விபத்து சம்பவித்துள்ளது. கிளிநொச்சியில் இருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்த காரும், முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த பேருந்துமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இதன்போது மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில், அவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்தனர். மாங்குளம்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-55)

DTPE CAMPUS DEC

2026 - மார்ச்
மாதத்திற்கான பட்டப்படிப்புகளின்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

> Bachelor of Education (B. Ed)
> B.A in English
> BA in Early Childhood and Primary Education

கால அளவு :-

➡ 01 வருடம் (இறுதியாண்டு நேரடி உள் நுளைவு)
HND Training College or College of Education/
Diploma + அனுபவம் உள்ளவர்கள்/ சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள்.

➡ 03 வருடம் :- A/L அல்லது அதற்கு சமனான தகமை உடையவர்கள்.

✓ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மற்றும் WES அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்ட கற்கை நெறிகள்.
✓ அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர் கல்வி நிறுவன விரிவுரையாளர்கள் மூலம் நேரடி மற்றும் Online விரிவுரைகள்.
✓ தேவை ஏற்படின் கல்வி கடன் வசதிகளும் செய்து தரப்படும். (நிபந்தனைக்குட்பட்டது.)


தொடர்புகளுக்கு :- 077 543 8086, 021 438 0273
இல. 100, மானிப்பாய் றோட் (முட்டாஸ் கடை Junction), யாழ்ப்பாணம்.

# அக்குரேகொட துப்பாக்கிச்சூடு; எரிந்த நிலையில் கார் மீட்பு!

கொழும்பு, பெப்.17

பத்தரமுல்ல அக்குரேகொட பகுதியில் இடம்பெற்ற அதிர்ச்சியை ஏற்படுத்திய இரட்டைக்கொலைச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கார் காலி பத்தேகம பகுதியில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி அக்குரேகொட பகுதியில் உள்ள பிரபல பல்பொருள் அங்காடிக்கு முன்னால், கார் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த சட்டத்தரணி புத்திக மல்லவராச்சி மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர் இந்தநிலையில் அகலிய பகுதியில் கார் ஒன்று தீப்பற்றி எரிவதை அவதானித்த பிரதேசவாசிகள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இந்தக் கார் இரட்டைக்கொலைச் சம்பவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட EPKI 7738 எனும் இலக்கத்தகடு கொண்ட கார் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ச-இ)



# 3 கிராமங்களுக்குள் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு

46 பேர் உயிரிழப்பு

அபுஜா, பெப்.17

நைஜீரியாவின் நைஜர் மாகாணத்தில் பொர்கு நகரில் உள்ள மூன்று கிராமங்களுக்குள் துப்பாக்கிதாரிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 46 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர் என்றும், 20க்கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் நைஜீரிய இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடத்தப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும் துப்பாக்கிதாரிகளைக் கைது செய்யவும் இராணுவத்தினர் தீவிர தேடுதலை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)

## சாதாரண...

2025ஆம் ஆண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது. இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்காக 3 ஆயிரத்து 545 பரீட்சை மத்திய நிலையங்களில் 4 லட்சத்து 51 ஆயிரத்து 463 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். எதிர்வரும் 26ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறவுள்ளதுடன், பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னதாக உரிய நிலையங்களுக்கு பரீட்சார்த்திகள் வருகை தர வேண்டும் - என்றார். (அ-ம)

## யாழ்ப்பாணப்....

கழக முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைகள் பீடத்தில் பகிடிவதைகள் இடம்பெறுகின்றன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்த முறைப்பாடுகள் தொடர்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விளக்கம் கோரியிருந்தது. எனினும், பல்கலைக்கழக நிர்வாகம் இதுவரை பதில் எதையும் வழங்கவில்லை. இதையடுத்தே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேரடி விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 11 . 1945



மறைவு 16 . 02 . 2026

சந்திரசேகரா கோமளேஸ்வரி

யாழ். சாவகச்சேரி அல்லாரை தெற்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரா கோமளேஸ்வரி அவர்கள் நேற்று (16.02.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா அன்னபூரணம் தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற சந்திரசேகரா (ஓய்வுபெற்ற அதிபர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், சியாமளா (ஆசிரியர் - லண்டன்), மேனகா (பிரான்ஸ்), அனுஷா (ஆசிரியர் யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), பாரதி (துபாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகிருஸ்ணன் (ஆசிரியர்- லண்டன்), மோகனதாஸ் (பிரான்ஸ்), குகானந்தன் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி), சுகந்தன் (கணிய அளவியலாளர் - துபாய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மகாதேவா (நல்லூர், பூநகரி), மகாலிங்கம் (நோர்வே), பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற ரவீந்திரராஜா (நோர்வே), சிவமலர் (கனடா), கோமளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், புகழினி, அருளினி, மன்ரியூன், ஸ்ரீபன், ஜஸ்மிதன், லக்சுதன், நித்திலா, மிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2026) புதன்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் இல.33 முதலாம், மைல் வீதி, மடத்தடி, சாவகச்சேரி என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.33, முதலாம் மைல் வீதி, மடத்தடி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்

(CS 31285) A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்17.02. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org